# சகந்தம்



முதலாமாண்டு நினைவு

# சுகந்தம்



மலர்வு
15-09-1943

உதிர்வு
27.11.2013

## திருமதி நடேசு ரஞ்சிதமலர்

"சுகந்தம்",
சத்திரங்கை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

15.12.2013.

## நுழை வாயில்

பரந்த இவ்வுலகில்
மரணம் ஒன்றெ சர்வ நிச்சயமானது
இது இயற்கை, உயிரினங்களுக்கு
அளித்திட்ட உன்னதமான தீர்ப்பு
அழித்தெழுதவோ எதிர்வழக்காடி வெல்லவோ
இயலாத ஓர் அற்பதமான தீர்ப்பு
இது விதி எனவும் கொள்ளப்படும்
இதற்கு எவருமே விதிவிலக்கல்ல
உடல், உயிர், உணர்வு
உறவாடுதற்கான உறவுகள் உள்ளிட்ட
அனைத்தையும் வழங்கி,
இன்பங்கள் துன்பங்கள் என
எல்லாவற்றையுமே அனுபவிப்பதற்கான
சகல போகங்களையும்
துணையாய் வழங்கியமை
ஓர் அற்புத சக்தியின் சிறப்பியல்பே!
இதற்கெனவே
அரிதாரம் பூசாத ஓர் வேடத்தினை
அவனியில் ஏற்று,
அச் செயற்பாடானது
மரணம் என்கின்ற இறுதித்திரை
விழுவதுடன் நிறைவடைகின்றது
இதுவே எமது வாழ்வியலின்
மறுக்கவொண்ணா யதார்த்தம்!
அல்லது விதி!
இந்த யுகதர்மமே

கீதையில் உபதேசமாகியது!!
கலக்கம் வேண்டாம்
நமக்கும் அதுவே வழியென்று
நாமும் அமைதி கொள்வோம்
தமிழரெம் வாழ்வும் விதியின் பாற்பட்டதே
பிறக்க ஒரு நாடு
பிழைக்க ஒரு நாடு என்னும்
அவல நிலையில் நாம்
உற்றார், உறவுகள்,
பெற்றோர், பிரயமானவர்கள் என
எல்லோரும் கூடி இன்புற்ற
நிலைமாறி எம்மினம்
எங்கெங்கோ...
தனித்த ஓர் அறையில்
தவிப்பைச் சுமந்துகொண்டு – வெறும்
இயந்திர மயமான வாழ்வில்
வசப்பட்டு நிற்கின்றது
எமது பாரம்பரியப் பண்பாட்டுக் கோலங்களின்
அடையாளங்களே அற்றுப்போன
அவலநிலையில், இந்த
மலர் – நினைவுமலர்
எம்மிதயத்தினை மெல்ல மெல்ல
மயிலிறகால் தடவி இதமளிக்கிறது
ஆம்
புலம் பெயர்ந்துள்ள
உறவுகள், வாரிசுகள் உடன்பிறப்புக்கள்
தங்களின் தவிப்பை
தாங்கள் அனுபவித்த, தங்களின்
குடும்பத் தலைவியான அமரர்
மலரின் நினைவுகளை, தங்களின்
இதயத்து அழத்தளத்தால்
நன்றி கலந்து வெளியிடும் மலராகவே

இந் நினைவுமலர்
கமழ்கின்றது.
உரிய வேளையில் உடனிருந்து
செய்ந்நன்றிக் கடன்களை
நிறைவேற்ற இயலாத ஆதங்கம்
அந்த உறவுகளின்
ஒவ்வொரு வரிகளிலும் நிழலாடுகின்றது.
இவை வெறும் வரிகளல்ல!!
எமது பாரம்பரியப் பண்பாட்டியலின்
பதிவுகள்!!!
எமது பண்பாடு இன்றும்
நிலைத்துள்ளமைக்கான முரசறைதலே!
ஈமெயிலில் வந்தடைந்த
இவ்வரிகளை நூலாக்கும்
பொறுப்பினை எனக்களித்த
உடன்பிறவாச் சோதரன்
தங்கவழவேல் ஆசிரியர் அவர்களின்
அன்புப் பணிப்பிற்கிணங்க இம்மலரினை
உங்களின் கரங்களில்
தவழ விடுகின்றேன்.

*- விஷ்ணுப்பிரியா -*

## ரஞ்சிதமலரின் நினைவில் பரவும் சுகந்தம்

*- சுவாதி*

குயில்கள், குருவிகள், குணதிசை வானம்
அகிலம், ஆழ்கடல், ஆவினம், தாவரம்
எங்கணும் மகிழ்ச்சியின் இன்பமாய் நிறைந்திடும்
தங்கநாள் காலையில் தண்ணொளி சுகந்தம்
தழுவிய அழகிய நடேசுவின் இல்லம்
மருவிய இன்னிசை மலரெனும் மனைவியால்
கண்ணைக் கவரும் வண்ண வடிவெனப்
பண்ணிய பொலிவினை எண்ணினான் பார்க்கிறேன்.
பாரதி வீதியின் ஓரமாய் அமைந்த
சீருறு காணியின் சுந்தர வீட்டினைச்
சூழவே தென்னையும் சுவைமிகும் மாமரச்
சோலையும் மலர்சொரி மல்லிகைப் பந்தலும்
கூடவே முருங்கையும் கமுகம்பிள்ளையும்
குழந்தைகள் விரும்பிடும் ஜம்பு நாவலும்
மாதுளஞ் செடிகளும் மனங்கவர் றோஸ்களும்
மங்களக் காட்சியாய் மனங்களில் விரைந்திடும்
சுற்றிய மதிலுடன் குருமணல் முற்றமும்
பற்றிய பாலமும் படலையும் கேற்றுமாய்
குளியல் அறையும் குளிர்ந்த நற்கிணறும்
நாலறை குசினி கூடம் இரண்டும்
நன்றாய் அமைந்த விதானமும் தூணும்
சாளரம் பொருந்த அழகழகாக
அமைந்த அவ்வில்லம் அன்புடன் இன்பமாய்
சுகந்தம் எனும் பெயர் பெற்று ஒளிர்ந்தது
தந்தைதாய் தந்திடத் திளைத்த நல்வாழ்வு
சுந்தரம் சொகுசு சோபனம் அமைதி
கொண்டதாய் அமைந்து குதூகலித்து இருந்ததைக்

கண்ட நல்மனிதர்கள் களிப்புடன் வாழ்த்தினர்
ஏற்றிய தீபம் போல் இல்லறம் காப்பதில்
போற்றிடு நடேசுமலர் பொறுப்புடன் இருந்தனர்
அக்கம் பக்கம் அயலவர் தம்முடன்
பக்குவம் ஆகவே பழகி மகிழ்ந்தனர்
ஓயா இசையொலி உளங்கவர் வாத்தியம்
சீராய் சிறப்பாய் சித்தம் மகிழ்ந்திடக்
காலையும் பகலும் மாலையும் இரவும்
தேனாய் அமுதாய் தித்திக்கும் மெல்லிசைப்
பாடல்கள் மழைபோல் மாயாதொலிக்கும்
பண்ணிசை செவியில் வெள்ளமாய் நிறையும்
லீலா, சித்திரா, சுசீலா, ஜானகி
வசந்தகுமாரி, வாணிஜெயராம்
ஜேசுதாஸ், சௌந்தரராஜன், சீர்காழி
பி.பி.ஸ்ரீனிவாஸ் எஸ்பி பாலாவென
எத்தனை பெரும்பெரும் வித்தகப் பாடகர்
இசைத்திடும் பாடல்கள் நூறுநூறாயிரம்
மாந்தி மாந்தி மகிழ்ந்திடும் மலரொடு
மானச நடேசு மயங்கியே இடைக்கிடை
பாடிடும் சோகப் பாடல்கள் தொடர்ந்திடும்.
நாள்களும் போயின நடேசுவும் மறைந்தார்
முரளி திருமணம் சுரதா வதுவை
திரமாய் அமைந்து தங்கேஸ் ஜெயராஜ்
இனியநல் மருகராய் இல்லறங் காத்தனர்.
நனிமணி அணியெனும் பேரர் பேர்த்திகள்
தமைமலர் நடேசு பார்த்து மகிழ்ந்தனர்.
இமை கண்காத்தல்போல் இதயம் போற்றினர்.
இன்புற்று அன்புப் பொய்கையில் மூழ்கி
தெள்ளியராகித் தெளிந்து இன்புற்றனர்.
முரளியின் இல்லறம் டென்மார்க் ஆனது
சுரதா ஜெயராஜ் குழந்தைகளிருவர்
கனடிய பூமியில் குடும்பம் அமைத்தனர்.

மனம் நிறைவெய்தலே வாழ்க்கையின் இன்பம்.
போராட்டந்தான் பயணம் முழுதும்
நீரோட்டம் போல் கதிகள் மாறும்
ஓடும் நதியும் ஒருநாள் உலரும்
கூடும் வெயிலும் நிழலும் தணியும்
பொறுமைக் குணம்நிறை பெருமான் நடேசுவை
கருணை மனமலர் இழந்து போனபின்
வெறுமை வேதனை தனிமை துயரென
சிறுமைகள் பலவாய் மனதை வதைத்தன.
பெற்றவர் இல்லை பிள்ளைகள் தம்பிமார்
உற்றநல் அக்கா பெறாமக்கள் பேரர்
பக்கத்துணை யென எவருமேயில்லாப்
பாவியாய் போனதாய் கரைந்துமே அழுதனர்
கணவனை இழந்த கடுந்துயர் வேளையில்
துணையென உடன் பிறப் பெவருமேயில்லா
நிலையினை நினைந்து நெஞ்சில் தீமூண்டது.
நெட்டுயிர்ப் பெழுந்து நீறாய்ப் பரந்தது
ஓயாக் கவலைகள் உயிரை வதைத்தன
உள்ளம் தேற்ற முரளி வருவான்
பாழாய்ப் போன போரினால் சுரதா
பார்த்திடவில்லை யென உயிர் தளர்ந்தாள்.
பூவென மலர்ந்து பொலிவுடன் விளங்கிய
வாழ்வது நீர்மேல் குமிழிபோல் ஆனது.
மார்பிலே மெல்லென வந்ததோர் சிறுவலி
நோவென மெதுவாய் வளர்ந்தது கண்டவர்.
வைத்திய நிலையம் போகும் நல்வழியில்
வந்தனன் காலன் முச்சக்கர வண்டியுள்.
புகுந்துயிர் கவர்ந்திட அவசரப்பட்டான்.
வருந்திடும் மலரைப் பறித்து மறைந்தான்.
வந்தவர் எல்லாம் செல்லுதல் தான்விதி
வாடித் துடித்து வருந்தி பதைத்துக்
கூடிக் குழறிக் கூக்குரல் இட்டுத்
தேடிக் காணும் வழிஎவர் அறிவார்

வேதனைத் தீயில் வெந்து மடிந்திடல்
வீண் செயல். செத்தவர் பிழைத்திடமாட்டார்
நாங்களும் ஒருநாள் மறைவது திண்ணம்
ஏங்கா திருப்போம் எனமனம் தெளிவோம்
எம்மைக் கேட்டா காற்றும் குருதியும்
எம்முடல் உள்ளே ஓடுது இல்லையே
நல்லதும் தீயதும் நடப்பது கூட
நாம் செய்யும் செயல்களின் விளைவுகளால்தான்.
நல்லவை செய்தால் மனதினில் இன்பம்
தீயவை செய்தால் மனதுளே துன்பம்
துன்பம் அணுகா வாழ்க்கையே அமைதி.
அமைதி அடைந்து சிறந்ததே உயர்வு
அம்மா செய்தநற் போதனை இவைதான்
ஐயா காட்டிய வழிகளும் இவையே.
அப்பா கூறிய போதனை அதிகம்.
அம்மாச்சி கதை தத்துவ விளக்கம்.
எல்லாம் சேர்ந்தே இயக்கின வாழ்வை
இருந்தும் இவர்கள் எம்முன் இல்லையே
எங்கே இவர்களைத் தேடிக் காண்போம்.
முடிவிலாப் பயணம் முடிந்ததை அறிந்தோம்.

வெந்த நெஞ்சோடு வேதனை சுமக்கிறேன்

*- ஜெ.சுரதா*



சொல்ல இனி எந்தனுக்கு என்ன உண்டு
சொல்லுவதால் என்ன பயன் நேரக்கூடும்
எல்லாம் தொலைந்த கதை ஆகிப்போச்சே
எண்ணி மனம் ஆறுதற்கு ஒன்றுமில்லை
ஐயா மறைந்த பின்னே அம்மா இருந்தார்
ஆறுதலும் தேறுதலும் அன்போடளித்தார்
பொல்லாத் துயரவலி மெல்ல மெல்லவே
போகும் விதத்தில் நல்லாறுதல் சொன்னார்
தோற்றம் மறைவு போல சுகதுக்கமும்
வாழ்க்கை நியதி. அது மாறாவிதி என்று
எண்ணற்ற மனிதர் கதை எளிதான பாடல்கள்
சொல்லி மனப்பாரம் சுகமாய் இறக்கி வைத்தார்.
சத்திரங்கை வீட்டில் நாமெல்லாம் பிறந்தோம்

சௌந்தர பவனத்தில் கூடி வாழ்ந்தோம்
மெத்த இனிய அந்த வீட்டினிலே
மேன்மை சுபாவங்கள் கற்று வளர்ந்தோம்.
அப்பா அம்மாச்சி அமைத்துத் தந்த
அழகிய சுகந்தம் எனும் மனைதனிலே
எப்போதும் போல மனம் மகிழ்ந்திருந்தோம்
இருகூட்டில் வளர்கின்ற பறவைகள் போல்,
காலம் வளர்ந்தது நாமும் வளர்ந்தோம்
பாரிய மாற்றங்கள் கண்டு மகிழ்ந்தோம்
ஓரிடம் ஒருமனை ஒரு குடும்பம்
வேறு வேறான பல புதுக்கூட்டம்
வேர்கிளை புதுப்புது மலர்த்தோட்டம்
ஆனது சீர்மலி பரம்பரையாய்
திக்குத் திக்கான இவ்வம்சங்களே
இனித் தேசதேசங்களாய்ப் பரந்து செல்லும்
வெற்றியும் தோல்வியும் சுகதுக்கமும்
எவர் வாழ்க்கையிலும் வரும் பொதுநியதி
ஜனனமும் மரணமும் வாழ்க்கையின் எல்லை
இதை மாற்றிடும் வல்லமை மனிதர்க்கில்லை
தந்தை மரணத்தைத் தழுவியபின்
என் தாய்பட்ட துயரத்தை யாரறிவார்
சிந்தை நொந்தழுத என் அன்னைக்கு
ஒரு சிறுகரங்கூட உதவ முன்வரவில்லை
மனத்துயர் புரிந்து அதை மாற்றத் தெரிந்தோர்
நினைத்த போதெல்லாம் வந்திட முடியாத்
தூரதேசங்களில் வாழ்ந்ததனால்
தனிமை என் அன்னையை தாக்கி வதைத்தது
மனதுள் நடக்கும் வேதனைப் போரை
தனிமை வேகமாய் வளர்ந்திடச் செய்தது.
அங்குமிங்கும் போய் ஆறுதல் தேடிட
அயலவர் உறவினர் அறியாதிருந்தார்
துன்பம் துடைக்கத் துணைவர் பிள்ளைகள்
தம்பிமார் அக்காள் என்றெவரும் இல்லை

இதந்தரும் மனையிலும் இசையிலும் கலையிலும்
எங்கும் எதிலும் நிம்மதி இல்லை.
வெந்த நெஞ்சோடு வேதனை சுமந்து
நொந்து துடித்த என் அம்மா கதையை
யாரிடம் சொல்வேன் யாருக்குணர்த்துவேன்
பெற்ற தாயை துன்பத்தில் விழவிட்ட
பெரும் பழியை நான் சுமக்கின்றேன் இன்று.
அம்மா என் தெய்வமே அன்பின் வடிவே
புனிதமாய் எம்மனையை போற்றிய அகல்விளக்கு
என்மனம் நோகாதிருக்கச் செய்து வைத்த
பல்லாயிரம் பணிகள் பக்குவமாய் மனதிலுண்டு
நீபோனதோடெனது நெஞ்சு இருளில் மூழ்கியது
ஏதோவெல்லாம் முயன்றும் என்மனது ஆறவில்லை
எத்தனையோ தத்துவங்கள் இருந்தும் உளம்தேறவில்லை
தனிமைத் தகிப்பில் அழும் ஒலி
இவ்வாறெங்கள் காதில் வீழ்கிறது



## இசையும் அம்மா

*- முரளி*



அம்மா....

பிறந்தவுடன் சொல்வதும் உயிரை வலியோடு முடிக்கும்போது சொல்வதும் அம்மாதான்.

உனது மனச்சாட்சிக்கு ஒன்று விரோதமாய் இருக்கின்றது என்று தெரியும்போது அதை எதிர்க்க என்றும் தயங்காதே. இது அம்மா எனக்காக அடிக்கடி சொன்ன வார்த்தைகள். அப்போதெல்லாம் என்ன அவனைச் சண்டைக்காரனாக்கப்போறியோ என்று ஐயா அம்மாவுடன் எதிர்த்து வாதிடுவார். வெளிநாடு என்று புறப்பட்டு வந்தபோது இங்கே உன்னாலே நிறையச் சண்டைகள் எல்லாம் நடந்திருக்கு. அங்கே போயும் ஒருவருடனும் சண்டை போடாதே... என்றும் எல்லோருடனும் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்துகொள்ளக் கற்றுக்கொள் என்றுதான் என்னை அனுப்பிவைத்தார்.

ஒரு தாய்க்கும் பிள்ளைக்கும் உள்ள உறவையும் அந்த உணர்வுகளையும் யாரும் யாருக்காகவும் விளங்கப்படுத்த முடியாது.

உலகத்தில் வாழுகின்ற சகல ஜீவராசிகளினாலும் இலகுவாக விளங்கக்கூடியது இந்தத் தாயன்பு ஒன்றுதான். இந்த உலகத்திலே நிலையானதும் உண்மையானதும்கூட இந்தத் தாயன்புதான். என்னதான் இழப்புக்கள் ஏற்பட்டாலும் ஒரு தாய் தந்தையின் இழப்பை எதுவுமே ஈடுசெய்துவிடமுடியாது. அந்த வெற்றிடத்தை எதையும் கொண்டு நிரப்பிவிடவும் முடியாது. அந்த இழப்பையும் வேதனையையும் சொல்லியோ எழுதியோ ஆறுதலடையவும் முடியாது.

அம்மா என்று நினைக்கும்போதெல்லாம் என் மனவெளியில் ஆயிரம் ஆயிரமாய் மலர்கள் வந்து விழுந்தாலும் அம்மாவுக்கும் எனக்குமுள்ள இசை சம்பந்தமான நினைவுகள்தான் எப்போதும் என்முன் வந்துநிற்கும். அன்று ஒருநாள் எனது திருமணம் இந்தியாவில் நடைபெற்றபோது அம்மாச்சி அப்பா உட்பட எல்லா உறவுகளும் எனக்காக வந்திருந்தார்கள். போரின் கொடுமைகளும் கெடுபிடிகளும் நிறைந்த இக்கட்டான சூழ்நிலை. பிரயாணம் செய்வது என்பது நினைக்கமுடியாத, இலகுவான சூழ்நிலை கொண்ட காலகட்டமல்ல அது.

திருமணம் முடிந்து இரண்டோ மூன்றாவது நாளில் ஒவ்வொருவருடனும்' அதுபற்றிக் கதைத்தபோது ஒவ்வொருவரும் தாங்கள் பட்ட கஸ்ரங்களையும் துன்பங்களையும் என்னோடு பகிர்ந்துகொண்டார்கள். அந்தத் தள்ளாத வயதிலும் என்ரை அப்பா அம்மாச்சி நீ எங்கடை மூத்த பேரன். அதுதான் உனக்காகத் தாங்கிவந்தோம் என்று சொன்னதும் இப்போ என் நினைவில் வந்து போகின்றது. அம்மாவிடம் போனேன் "அம்மா எப்படி உன்ரை பயணம் போனது...?" தம்பி நெல்லியடியில் வந்து ஒரு வானிலே ஏறினோம். அப்போது அந்த வான்காரப் பொடியன் ஒரு பாட்டுக் கசெற்றைப் போட்டான். நல்ல காலமோ கெட்ட காலமோ தெரியாது அந்த ஒரு கசெற்தான் திரும்பத்திரும்ப பாடியது.

அதிலே முதலாவது பாடலாக இளையராஜாவும் ஜானகியும் பாடிய மாதுளங்கனியே நல்ல மரகதக் கிளியே என்ற சிந்துபைரவியில் அமைந்த பாடல்... கேட்ட நேரம் தொடக்கம் உன்ரை கலியாணம் வரைக்கும் அந்தப் பாடல் ஒன்றே என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது. இளையராஜா போட்ட

சிந்துபைரவியில் அமைந்த மற்ற பாடல்களைக் காட்டி சிந்துபைரவி ராகத்தை இந்த இளையராஜா என்ன இலகுவாகவும் இதமாகவும் போட்டிருக்கிறார் என வியந்து பாராட்டிவிட்டு அந்தப் பயணம் எனக்குப் பெரிய பொருட்டாகவே தெரியவில்லைத் தம்பி என்று சொன்னதை இப்பவும் எப்பவும் என்னால் மறக்கமுடியாது.

கடைசிக் காலங்களிலும் உன்னோடு கதைக்கும் போதெல்லாம் சுப்பர்சிங்கர் என்ற நிகழ்ச்சி நடப்பதுபற்றியும் அந்தக் குழந்தைகள் என்னமாதிரியெல்லாம் பாடுகிறார்கள் என்றும் இங்கே பாடகர்கள் என்ற பெயரில் சிலபேர் எங்களைக் கொலைக்களத்துக்கெல்லே கூட்டிக்கொண்டு போகின்றார்கள் என்று சொன்ன வார்த்தைகள் இப்போதும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறன. மிகச் சிறந்த இசையாக இருந்தாலும் இசைக்காதுகள் இல்லையென்றால் அவர்களுக்கு அது வெறும் ஒலிதான் என்று ஒரு இசைமேதை சொன்னதை உன்னில்தான் கண்டுகொண்டேன் அம்மா.

கடந்த காலத்தை வருத்தமின்றி ஏற்றுக்கொள்ள முயற்சிக்கின்றேன். பிரிவு என்பது யாராலும் மறுக்க முடியாத வலி. உன் நினைவு என்பது யாராலும் திருடமுடியாத அழிக்க முடியாத பொக்கிஷம் அம்மா. நீ இப்போது இல்லை என்று சொன்னாலும் என்னாலே ஏற்றுக்கொள்ள முடியாது. இப்பவும் நீ என்னுடன் ஒவ்வொருநாளும் கதைத்துக்கொண்டுதான் இருக்கிறாய். இது எனக்கும் உனக்கும்தான் தெரியும்.

## மலரம்மா என் அம்மா

– ப.குழந்தைவேல்

மலரம்மா எனக்கும் அம்மா. எதிர்வீட்டிலிருந்து எடுத்ததெற்கெல்லாம் என்னையே கூப்பிடுவார். தம்பி குழந்தைவேல் என அவர் கூப்பிடும்போது அவர் நெஞ்சத்து வாஞ்சை பளிச்சென்று புலப்படும். கேட்கும் உதவிகளைத் தவறாது செய்வேன். நடேசப்பாவும் மலரம்மாவும் எனது தந்தை தாய் போலவே என்மீது மட்டுமல்ல என் மனைவி மக்கள் மீதும் மிகுந்த அன்பு வைத்திருந்தார்கள். நன்மையோ தீமையோ மனந்திறந்து பேசுவார்.

மறக்க முடியாத அவ்விருவரையும் எல்லாம்வல்ல இறைவன் நல்வரம் அளித்து காக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம். அவர்களின் இறுதிநாட்களில் நெருங்கிய உறவினர் எவருமெயில்லை. வெளிநாடுகளில் இருந்தனர். நடேசப்பா போனபின் மலரம்மா தனித்துப்போனார். இதனால் தான் தனித்துப்போனதாக எம்மிடம் பலதடவை கூறி அழுதிருக்கிறார். அந்த நினைவுகளை கீழே தருகிறேன்.

"தனித்துப் போனேன் தயவிலா தழுகிறேன்
தனிமைப் புயலில் தத்தளிக்கின்றேன்
துன்புறுகின்றேன் துயர் சுமந்தழிகின்றேன்
அன்புடன் இதையறிந்து ஆறுதலளிக்க
முன்வருவாரென ஒருவரைக் காணேன்
தீயினில் மூழ்கிய நெய் விளக்காகினேன்
கூடப்பிறந்த எவரையும் காண்கிலேன்

இரவுகள் தூக்கத்தை இல்லாதொழித்தன
பகல்களோ மனதை இருளிலே தள்ளின
பார்ப்பவர்க் கிவையெல்லாம் புரியவேயில்லை
கூப்பிட டென்மார்க் மகன் முயல்கின்றான்

கூடவே தம்பியும் லண்டன் வா என்கிறான்
ஆனால் எதுவுமே நடப்பதாய் இல்லை
நான் என்செய்வேன் நடுக்கடல் வீழ்ந்தேன்
நாக்கு வரண்டும் நக்க நீர் இல்லை.

வீடும் சூழலும் வெறுமையாய்ப் போயின
வீதியும் வானமும் வெறிச்செனக் கிடக்குது
நாடியே சொல்பவர் நயமொழி கசக்குது
கூடியென் உறவுகள் கொடுத்த நல்லாறுதல்
வார்த்தைகள் வேதனை வளரவே செய்தன
சோர்வென்னைச் சுற்றிய முள்வலை ஆனது
சோர்ந்து நான் வீழ்ந்திட தூக்குவார் யார் உளர்
தேர்ந்த என் துணைவரும் தூர ஏன் ஓடினார்

நேற்றுவரை இருந்த நெஞ்சத் துணிவெங்கே
நினைவுகளும் நிம்மதியும் நிறைவுகளும் என்னாச்சு
உற்றாரும் உறவினரும் அயலவரும் நட்பினரும்
கற்றாரும் சேர்ந்து சொன்ன உற்சாக வார்த்தையெங்கே
தவிப்பும் என் தத்தளிப்பும் தணிந்திடவேயில்லையம்மா
தம்பிமார் மூவரது அழைப்பினையும் காணேனே
தனித்து விடப்பட்டேன் தளர்ந்து விழலானேன்
தனித்து நான் போவதனை உணர்த்தவா இவையெல்லாம்

போகும் வழியும் புதியநல்விடிவும்
ஏதென அறியேன் எவர் அதைக் காட்டுவார்
ஆடவும் பாடவும் அருகிலிருந்தோர் எல்லாம்
கூட வந்துரைத்திடும் சூழல் இன்றில்லையே
மூடிப்போன நேர் முடிவுகள் எங்கும்
தேடிப்பார்த்தும் தென்படவில்லையே
ஓடிக்களைத்தேன் வாடித்தளர்ந்தேன்
கூடியழுதும் பயன் கிடைக்காது
போய் வருகின்றேன் விடைதாருங்கள்
மீண்டொரு காலம் வந்தால் வருவேன்..."

## மாலக்கா என் மனதில் வாழ்கிறார்

*- பாஸ்கரதாஸ்*

எல்லாம் என்றோ எழுதிய கதைதான்
இதில் பொல்லாப் பெதற்கும் இடமேயில்லை
புலம்பியழுதும் பயன் கிடைக்காது
புலம்பா திருக்கவும் முடியாதுளதே
மலரக்கா எனது இரண்டாம் தாயே
மாலக்கா என அழைப்பதில் இன்பம் நிறைவாயுண்டு
உண்டது முதலாய் உடுத்ததுவரையும்
உறங்கி எழுந்து ஆடியதெல்லாம் மாலக்காவின் அணைப்பில்
நிகழ்ந்தது. பள்ளிப்படிப்பு விளையாட்டென்று
துள்ளித்திரிந்த காலங்கள் எல்லாம் உள்ளத்துறையும்
இவ் அக்காவுடன் தான்
ஊனாய் உதிரமாய் உயிர்மூச்சதுவாய்
உணர்வுடன் வளர்ந்த உண்மை நிலையால்
ஆனது கூட என் அக்காவுடன் தான்
எங்கே எப்படி எதுவாய் நானிருப்பினும்
அங்கே எனை ஆளும் அன்பு வடிவாய்
நின்று நிலைப்பது மாலாக்காவே!

## உடன் பிறவாச்சோதரிகள்

பிறந்தது முதல் நாம் வளர்ந்தது வரை எம்
வாழ்வின் துணையாய் வந்தவர் இன்று
பறந்தது கண்டு பதறி அழுகிறோம்
பாவிகள் என எமை நோகிறோம் ஏனெனில்
சிறந்தது எதுவென அறிந்து கொண்டெதனையும்
சீர் செய்யும் வாய்ப்பை இழந்தே என்றோ
நிறைந்த நல்வாழ்வு நேர்த்தியாய்ப் பெற்ற
மலரக்காவை என்று இனிக்காண்போம்.

## பேரப்பிள்ளைகள்

அன்பின் வடிவாமாய் இருந்த அம்மம்மா! அப்பம்மாவே
அணைத்தெமை வாழ்த்தி வளர்ததை மறவோம்
எங்கள் அருகில் எம்மோடிருந்து
எம்மை இன்புறுத்தி ஏற்றவை செய்த
எழில் நிறை அன்பை என்றும் மறவோம்
வாழ்வின் வசந்தம், சுகந்தம், இன்பம்
யாவிலும் உங்களை உலகில் மறவோம்
அம்மம்மாவே ! அப்பம்மாவே!
இன்னொரு பிறவி எடுத்தெமைக்காண
முன்வருவாயோ? முடிந்தால் மகிழ்வோம்

## மலரக்கா என் இசைப்பியா

கி.ராஜேந்திரன்

மலரக்கா என்று சொல்லும் போது என் நெஞ்சில் ஓடி வருவதெல்லாம் என் பிஞ்சுப் பருவத்தின் நினைவுகளே. என்னுடைய ஆரம்பகாலக் கல்வி தொடங்கிய காலம், 1953 என நினைக்கிறேன். தம்பிமார் எல்லோரையும் நிரையாக நிற்கவைத்து குளிப்பாட்டித் தோய்த்து உலர்ந்த தூய்மையான ஆடைகளை உடுத்தி முகத்திற்குப் பவுடர் பூசி, தலைவாரி எங்களைப் பாடசாலைக்கு அனுப்பி வைத்த காலம் அக்காவும், மலரக்காவும், நானும், சின்னத்தம்பியும், பின்னர் ஒரு வீட்டில் வாழ்ந்தோம். பாடசாலைக்கு எங்களை அனுப்புவதற்காக அலங்காரம் செய்யும் போதெல்லாம் அவரின் பக்கத்திலிருக்கும் வானொலியிலிருந்து இனிமையான சினிமாப் பாடல்கள் ஒலித்த வண்ணம் இருக்கும். என்னைக் குளிப்பாட்டி, உடை உடுத்தி தலைவாரும் நேரத்தில் வானொலியில் ஒலித்த அந்தப் பாடல் என் நினைவுக்கு வருகின்றது. மலரக்கா என்னை மறந்து அந்தப்பாடலிலே நனைந்து மூழ்கிவிட்டார். காந்தத்தால் கவரப்பட்ட இரும்பைப் போல் அப்பாடல் மலர் அக்காவைக் கவர்ந்து விட்டது.

“ஜீவிதமே சபலமோ - என்
ஜீவிதமே சபலமோ

தென்றல் சுகமும் மலருமோ

பிரேமையென்றால் மதுரமோ"?

'அனார்க்கலி' படத்தில் ஜிக்கி பாடியபாடல் அது

உள்ளத்தை உருக்கும் சோகம் நிறைந்த அப்பாடலை மலரக்கா மெதுவாக, இனிமையாகப் பாடுவார். அந்த இனிமையான குரல் என்னை வா என்றழைக்கிறது. இனிமையான அந்தக்குரலை மீண்டும் கேட்பதற்காக காத்திருந்தேன். நான் கேட்காமலே அந்தக்குரல் ஓய்ந்துவிட்டது. நான் எனது கிராமத்துப்பள்ளியை விட்டு வல்லை சிதம்பராக்கல்லூரிக்கு எட்டாம் வகுப்புக்கு மேல் படிப்பதற்காகச் சேர்ந்திருந்தேன். 1961-62ஆம் ஆண்டு காலமது. 1962ம் வருடம் எனது கடைசித்தம்பி குட்டி பிறந்த வருடம்.

நான் பாடசாலை முடிந்து வீடு வந்து சேர்ந்த போது மலரக்கா குசினிக்குள் கண்ணீர் வடித்தபடி இருப்பதைக் கண்டேன். ஏன் அழுகிறாய் எனக் காரணம் கேட்டேன். அதற்கு தம்பி, ஐயா பொன்னுச்சாமி சோதிடரிடம் போய் குட்டியின் குறிப்பைக் காட்டி வந்தார். அவர் இரண்டு மூன்று நாட்களுக்கிடையில் குழந்தைக்குத்தீங்கு ஏற்படும். அதிலிருந்து தப்பினால் குழந்தை பிற்காலத்தில் நால்லாயிருக்கும் என்று சொன்னாராம். இவ்வாறு கண்ணீர் பெருக மலரக்கா திக்கித் திணறி அழுது கொண்டார். இன்று கண்ணீர் வடியும் முகத்தோடு அவர் என்முன்னே வந்து வாவா என்று அழைக்கும் சோகக்குரல் மனதிலே கேட்கிறது.

இப்பொழுதும் 'ஜீவிதமே சபலமே" என்ற பாடலே என் மனம் நிறைந்து கேட்கிறது. வாலிப பருவத்தில் மலரக்காவுக்கு மிகவும் பிடித்த தமிழ்ப்பாடல்கள் எல்லாம் எனக்கும் பிடித்தவையாய் இருந்தன. இருவருக்கும் பிடித்த பாடல்கள் என பல திரையிசைப் பாடல்கள் எம்மிடையே மிகுந்த பாசத்தை வளர்த்தன எனலாம். இசையைப் பொறுத்தவரை இருவர் உணர்வும் ஒன்றே எனலாம். ஆனால் பாட்டின் இராகம் என்ன என்பதில் அவருக்கிருந்த ஆர்வம் என்னிடம் இல்லை. அவரோ பெரும்பாலும் எல்லாப் பாடல்களின் ராகங்களைச் சரியாகச் சொல்லிவிடுவார். அந்த ஞானம் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் யமுனாராணி பாடிய "குலுங்கிடும் பூவில்லாம்" என்ற பாடலை என்ன ராகம் என்று சொல்லுமாறு

என்னைக் கேட்டார். நான் திகைத்தேன் ஆனால் அக்கா 'இது எங்கள் பாடசாலை ஆசிரியை சொல்லித் தந்த "நானே நல்ல கந்தன் விளையாட்டே எனது ஆசை"
என்ற பாட்டைப் போல் இல்லையா? என்று கேட்டுவிட்டு அந்தச்சினிமாப் பாடலின் ராகத்திலேயே அந்த கிராமியப் பாடலைப் பாடிக் காட்டினார். அந்தவியப்பு இன்றும் என் மனதில் அழியவில்லை. அத்துடன் ராகங்களை அடையாளங்காணும் நுட்பத்தையும் சொல்லித் தந்தார். அதில் எதுவுமே என்னில் தொற்றிக் கொள்ளவில்லை.

1974 ஆம் ஆண்டு நான் லண்டன் வந்தேன். எல்லாம் வெறுமையாகவே தெரிந்த காலம். பழைய பாடல்களைக் கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் நான் லண்டனிலிருந்தும் மலரக்காவுடனேயே அப்பாடலை பகிர்ந்து கொள்வேன். மனமுருகி குழம்பி தடுமாறி ஓவென்று அலறவேண்டுமென்று தோன்றும்.

அமைதி குலைந்த நமது நாட்டின் கொடுமைகளிலிருந்து தப்பிக்கொள்ள புகலிடமும், புதுவாழ்வும் கிடைத்தன. வெளிநாடுகளில் அவ்வாறு குடியேறியவர்களில் எனது சகோதரங்களின் குடும்பங்களும் அடங்கும். கணவனை இழந்து தனிமையாகிவிட்ட மலரக்கா வெளிநாடுகளில் வாழும் எங்கள் எல்லோரையும் வந்து பார்ப்பார் என்று வழிமேல் விழிவைத்துப் பார்த்திருந்தேன். அந்த நினைவும் நிறைவேறவில்லை. நான் இலவுகாத்தகிளியானேன்.

மலரக்கா பாடும் பழைய சோககீதங்கள் மீண்டும் மீண்டும் என் காதுகளில் வந்து மோதுகின்றன.

ஜீவிதமே சபலமோ என்ற படிப்பினையே என்னைச் சூழ்ந்து நிற்கும் கேள்வியாகும். மலரக்கா உன் பெயர் ரஞ்சிதமலர். நீ என் நெஞ்சில் என்றென்றும் பூத்திருக்கும் அன்பு மலர்.



## எங்கள் மலரக்கா

*கி. புவனேஸ்வரலிங்கம்*

நீண்ட நெடுந்தூரம் எங்களை விட்டுப் பிரிந்து சென்ற மலரக்கா! நீ ஓடி மறைந்து ஒரு வருடமாகிவிட்டதா? உன்னை நினைக்கையிலே ஓராயிரம் எண்ணங்கள் என்னைச் சூழ்ந்து கொள்கின்றன. உன்னோடு கழித்த ஒவ்வொரு தருணமும் ஏங்கி அழ வைக்கின்றது..

எங்கள் குடும்பம் ஐந்து பிள்ளைகளைக் கொண்டது. ஐயா அம்மாவுடன் நாங்கள் வாழ்ந்த காலம் பொன்னை விடச் சிறந்தது. இன்பமும் களிப்பும் நிறைந்த காலமது கடும் உழைப்பாளியான எம் தந்தையார் தன்னம்பிக்கை மிகுந்தவர். தன் உழைப்பால் அவர் தனக்கென தேடிக்கொண்டவை பல அம்மாவையும் எங்களையம் ஐயா காப்பாற்றிய விதம் சாதாரணமானதன்று உணவு உடை, இருப்பிடம், பொழுதுபோக்கு கொண்டாட்டம் என எல்லாவற்றிலும் நாங்கள் குறைவற்றவர்களாகவே இருந்தோம். 1957ம் ஆண்டு ஐயா கட்டி முடித்த சௌந்தரபவனம் என்னும் வீடு இதற்கு தாரணம்.

தைப்பொங்கல் சித்திரை வருடப்பிறப்பு தீபாவளி என வரும் கொண்டாட்டங்களில் எங்கள் வீடு சிறப்பிடம் வகித்தது. எங்கள் குடும்பத்தை விட வெளியே தன் குடும்பத்தைச் சார்ந்த சகோதரர், சகோதரி வீடுகளிலும் இதமான மகிழ்ச்சியே வெளிப்படும். குறிப்பாக தனது பெரியண்ணன் வீரன் குடும்பத்துக்கும், தன் அக்காளான சின்னப்பிள்ளை குடும்பத்திற்கும் தேவையான விழாப்பரிசுகளை யாருமறியாமல் எங்களிடம் தந்து அனுப்பிவிட்டு தான் மகிழ்ச்சியடைவார். தன் தம்பிமாரோடு பெறாமகனான முருகண்ணைக்கும் அளித்த ஆதரவுகள் மறக்க முடியாதவை. இப்படியான சந்தர்ப்பங்களில் எங்கள் அம்மா முகம் சுருங்கிப் போனதைக் கண்டிருக்கிறேன். ஆனால் அம்மாவிற்குரிய பங்கு எப்போதும் இரட்டிப்பாகவே இருக்கும்.

எங்கள் வீடு குடிபுகுந்த பின் பெரியக்காவுக்குத் திருமணம்

நடந்தது. வீடும், திருமணமும் ஊரார் வாயில் பெருங்கதையாக அடிபட்டது. அடுத்த ஆண்டு எங்கள் மலரக்கா எங்கள் மாமியின் மகனான நடேசுவை திருமணம் செய்தார். அதில் மாப்பிள்ளைத் தோழனாக நான் விரல் கோர்த்து வந்ததை இன்றும் உணர்கின்றேன். இத்திருமணத்தில் எங்கள் உறவினர் எல்லோரும் கலந்து கொண்டனர். திமணத்தின் பின்னும் நாங்கள் எல்லோரும் ஒரே வீட்டில் சந்தோசமாக வாழ்ந்து வந்தோம். திருமண வரிசையில் அண்ணாவும் நானும் ஒருவர் பின் ஒருவராக நின்றோம். ஆனால் அண்ணாவின் திருமணம் கொழும்பில் நடந்தது. வரவேற்பு விழா எங்கள் வீட்டிலேயே கொண்டாடப் பட்டது. இந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் நான் கண்ட மலரக்காவின் முகமலர்ச்சியையும் துடிப்பான செயல்களையும் என்னால் என்றுமே மறக்க முடியாது.

அண்ணா லண்டனிலும் அதன் பின் நான் அவுஸ்ரேலியாவிலும் இருந்ததை மலரக்காவே அடிக்கடி மறவாமல் நினைவு கூர்வார். பின்னர் என் மகன் தினேஷ் பிறந்த போதும் தொட்டிலாட்டு விழா நடந்தபோதும் பல்லுக் கொழுக்கட்டை முதலாவது பிறந்தநாள் என்ற வரிசையில் இடம் பெற்ற கொண்டாட்டங்களில் என் அக்கா இருவரும் முதலிடம் தாங்கினர்.

மலரக்கா பற்றி நினைக்கும் போதெல்லாம் என் சின்ன அத்தானை நினைக்காமலிருக்கவே முடியாது. அவர்களிருவரும் சொந்தமாச்சாள் மச்சானாக இருந்ததாலோ என்னவோ குடும்ப வாழ்வில் அவர்கள் பூரண வெற்றியே கண்டனர். பதினாறு வயதில் மலரக்கா திருமணம் நடந்தது. அத்தானுக்கு பத்தொன்பது வயது. அக்காமாரின் குழந்தைகள் பிறந்த போது எங்கள் தம்பி குட்டியும் பிறந்தான். எங்கள் வீடு பெரியகுடும்பத்தைத் தாங்க நேர்ந்தது. ஐயா மலரக்காவுக்கு தனியாக ஒரு வீடு கட்டிக் கொடுக்க முடிவு செய்தார். வாழ்க்கையில் தன் காரியம் ஒன்றிற்கு அண்ணாவையும் என்னையும் உதவும்படி ஐயா கேட்டது அந்தத் தருணத்திலே தான். வல்லாவத்தையில் பாரதி வீதியில் மலரக்காவுக்கான வீடு எழுந்தது. வீட்டுக்குத் தெவையான எல்லா வசதிகளும் தடையின்றி நிறைவேறின. பாரதி வீதியின் அருகே அமைந்த சுகந்தம் என்னும் வீட்டின் அமைப்பே தனி அழகானது. முன்னொரு போதும் ஒரு வீடு கட்டி அனுபவம் இல்லாத எங்கள் சகோதரர் முறையான

ஆ.சந்திரன் என்பவர் அதை நிர்மாணித்தார்.

வாழ்க்கை ஒரு போராட்டம் என எல்லோரும் அறிவோம். இப்போராட்டத்தில் உறவினர் பங்கு எப்படியோ இருப்பது உண்மை. போராட்டம் நிறைந்த வாழ்வின் இனிமையான சம்பவங்களை நினைத்து மகிழும் நாம் துன்பங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஐயாவும் அம்மாவும் போர்க்கால இடர்பாடுகளில் அனுபவித்த துன்பங்கள் எதையும் நான் என் கண்ணாரக் காணவில்லை. மூப்படைந்து உடல் தளர்ந்து இயங்கமுடியாத நிலையிலும் அவர்கள் நடமாடியபடியே மறைந்தனர். அவர்களுக்கான அந்திமக் கடமைகளில் எனக்குப் பங்கில்லாமல் போய் விட்டது. ஆனால் அவர்களின் மறைவின் போது மலரக்காவும் சின்னத்தானும் பிள்ளைகளை விடச் சிறந்த முறையில் ஈமக்கிரியைகளை அழகாகச் செய்து முடித்தனர். இவ்விருவருக்கும் கூட நான் என் அந்திமக் கடமையைச் செய்யவாய்ப்பில்லாமல் போனது என் துரதிர்ஷ்டமே.

முடிவாக அவர்களிருவரின் இசைப்பிரியத்தையும், பொறுப்புணர்ந்து கடமை செய்யும் மிக உயர்ந்த பண்புகளையும் ஒன்றன் பின் ஒன்றாக இப்பொழுதும் நினைத்துப் பார்க்கின்றேன். எவரிடமும் எதையும் எதிர்பார்க்காத மன அழகு பெற்றவர்கள் அவர்கள். அவர்களுக்கான எங்கள் கடமையை நாம் செய்யத் தவறினோம் என்பதை என் மனச்சாட்சி மறைக்க முடியாமல் என்னைப் புண்படுத்துகின்றது. அதற்குரிய சந்தர்ப்பங்கள் எனக்கு வாய்க்காமலே போய்விட்டன. மானசீகமாக அவர்களிருவரிடமும் நான் மன்னிப்புக் கோருகின்றேன்.

**கண்ணீர் சொரிவதுதான் வழியா?**

**– சகோதரி ரூபசவுந்தரி தங்கவாடிவேல்**

அன்புள்ளம் கொண்டவளே - எந்தன்
ஆருயிர்ச் சோதரியே
பண்பு நிறைந்தவளே - பிறர்
பகைமை விரும்பாத தங்கைச்சியே
இன்புற்று வாழ்வதற்கே - எமது
இனசன ஒற்றுமை காத்து நின்றாய்
தங்கக் குணத்தவளே - என்ன
தவறு கண்டு எம்மை மறந்து சென்றாய்

ஆசை நிறைத்து வைத்தேன் - உன்னை
ஐரோப்பா கூப்பிட ஆவல் கொண்டேன்
ஓசைப்படா மனதுள் - ஒரு
ஊமைப் பிரார்த்தனை செய்துவந்தேன்
காசைப் பெரிதென்று எண்ணா - நீ
கடல் கடந்தேகி உன் பிள்ளைகளின்
வாசஸ்தலத்தில் வந்து - ஆறிநிற்பாயென
மங்கல நிறைவுடன் காத்து நின்றேன்

காருண்ய மனத்தவளே - மிக
கவனமாய் உறவுகள் காத்திடவே
மாறு கூறா ஒரு நடுநிலையை - மன
மாண்பென எண்ணி இருந்தனையே
ஊருள்ள பொதுமனிதர் - மனு
நீதிகள் உரைத்த ஓர் வேளையிலே
வேறுபடா மனம் வேண்டுமென்று - மிக
மென்மையாய் உன்வழி நடந்தவளே

வண்ணப்பூ போன்றவளே - நல்ல
வாசமுல்லையென வளர்ந்தவளே
கண்ணைப் பறிப்பது போல் அமைந்த
கற்பகச் சூழலில் வீடமைத்து
என்னென்ன சுகங்கள் எல்லாம் - நீ
இனித்துச் சுவைத்திட உயர்ந்து நின்றாய்
கண்ணற்ற கடவுளவன் -உனது

களிப்பெலாம் வெடுக்கெனவே எடுத்துக்கொண்டான்.
மண்ணுலகின் கதையே இது
புரிந்து கொண்டால் துயர் குறைந்திருககும்
எண்ணமுன் உன் துணைவர் - நடேசு
இறந்திடவே மனம் சிதைந்து விட்டாய்
உன்னரும் சோதரர்கள் - பெற்ற
பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து நின்று
உன்னை அழைக்கவெண்ணி - மிக
உரியவை அனைத்தும் செய்தார்.

சின்னக் குழந்தையைப் போல் - எவர்க்கும்
சேர்ந்து உதவி செய்வாய்
மன்னிய திருக்கரத்தால் - நீ
மற்றவர்க்களித்ததை மறந்திடுவாய்
எண்ணி நினைத்தது போல் - இங்கு
ஏதும் நடக்காது எனப் படித்தாய்
நினைத்தது நடக்கவில்லை - என்றால்
நேரிய வேறொரு வழி நடப்பாய்
ஒப்புதல் செய்து விட்டாய் - ஒரு
வாறு நீ டென்மார்க் போவதற்கு
விசாவின் முயற்சி யெல்லாம் - மிக
விறுவிறுப்பாகவே நடந்ததென்று
ஆவலுடன் நீ காத்திருந்தாய் - அது
ஆண்டொன்றாகியும் நடக்கவில்லை
தம்பி தன்னோடழைப்பான் - சில
மாதங்கள் தங்க வழி செய்குவான்
ஆனால்

காலந்தான் ஓடியது
காரியம் எதுவும் நிகழவில்லை
மூடிய கதவு என - முழு
முயற்சியும் முடிந்தது முடிவாக
முனைப்பாக மார்கழியில் - என
மகள் சுரதா பதில் தந்து நின்றாள்
இனி இது தான் வழியென்றிருந்த - நிலை
மீண்டும் தோல்வியைக் கண்டதுவாம்

பயணம் முடிவாச்சு - அவர்
புறப்படும் நாளும் குறித்தாச்சு
மலர் மனம் நிறைவுற்றதோ - எங்கள்
எண்ணங்கள் யாவும் நிறைவேறுமோ
தெளிவின்றி நாமிருந்தோம் - சுரதா
தெம்பு பெற்றுத் தன் பணியளந்தாள்
கனவென ஆனது போல் - கடும்
நஞ்சென செய்தி வந்தடைந்ததுவே

பள்ளிப் பருவத்திலும் - வளர்ந்து
பருவமடைந்த பின்னும்
துள்ளும் பசுங்கன்றாய் அன்னையைச்
சுற்றித்திரிந்த நல்வேளையிலும்
கண்ணின் மணியெனவே - ஐயா
காவி மகிழ்ந்த நற்காலத்திலும்
வண்ணத்துப் பூச்சிபோல் - நீ
வளர்ந்த காட்சிகள் மறையவில்லை

கல்யாணப் பெண்ணாகி - பதி
கண்டு மகிழ்ந்திடும் துணையாகி
பிள்ளைச் செல்வங்களுடன் - பிறர்
புகழ்ந்து மகிழ்ந்திட தாயாகி
ஊரார் கண் வியந்திடவே - நீ
உலவிய காட்சி மறக்கவில்லை
உள்ளத்துணர்வுகளை - நாவால்
உரைக்கத் தயங்கியதேன்

பிள்ளைகளோடிருக்க - தயங்கி
பேதலித் தார்வங்குன்றி
தன்னந்தனியளாய் - நீ
நிற்பதற்காக ஒரு முடிவு செய்தாய்
ஊர்ப் பற்று உனைத்தடுக்க - பிற
காரணம் ஒன்றும் புரியாமலே
எல்லாம் முடித்து விட்டாய் - இனி
என்ன நான் செய்திடுவேன்.



## அம்மா

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம்
பெற்ற தாயன்றி வேறொன்று ஏது [அம்மா...]

அபிராமி சிவகாமி கருமாரி மகமாயி
திருக்கோயில் தெய்வங்கள் நீதானம்மா
அன்னைக்கு அன்றாடம் அபிஷேகம் அலங்காரம்
புரிகின்ற திருத்தொண்டன் நான்தானம்மா
பொருளோடு புகழ்வேண்டும் மகனல்ல தாயே உன்
அருள் வேண்டும் எனக்கென்றும் அதுபோதுமே
அடுத்திங்கு பிறப்பொன்று அமைந்தாலும் நானுந்தன்
மகனாகப் பிறக்கின்ற வரம் வேண்டுமே
அதை நீயே தருவாயே [அம்மா...]

பசும்தங்கம் புதுவெள்ளி மாணிக்கம் மணிவைரம்
அவையாவும் ஒரு தாய்க்கு ஈடாகுமா
விலைமீது விலைவைத்து கேட்டாலும் கொடுத்தாலும்
கடைதன்னில் தாயன்பு கிடைக்காதம்மா
ஈரைந்து மாதங்கள் கருவோடு எனைதாங்கி
நீபட்ட பெரும்பாடு அறிவேனம்மா
ஈரேழு ஜென்மங்கள் எடுத்தாலும் உழைத்தாலும்
உனக்கிங்கு நான் பட்ட கடன் தீருமா
உன்னாலே பிறந்தேனே... [அம்மா...]



## மனதில் உறுதி வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்
   வாக்கினி லேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
   நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்,
   கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
   தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்,
   காரியத்தி லுறுதி வேண்டும்;
பெண் விடுதலை வேண்டும்,
   பெரியகடவுள் காக்க வேண்டும்;
மண் பயனுற வேண்டும்,
   வானகமிங்கு தென்பட வேண்டும்;
உண்மை நின்றிட வேண்டும்;
   ஓம் ஓம் ஓம் ஓம்

மதுரன் கிறா(க)பிக்ஸ் ரூ ஓவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய்
0776688318, 021 226 3099.